தமிழ் நாடு சட்டப் பேரவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் ஐந்தாவது சட்டப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்

சனிக்கிழமை, 1971 ஜூன் 19.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 11 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இராமநாதபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் நாடு சட்டப்பேரவையில் 1967-லிருந்து 1971-ம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. டி. தங்கப்பன் அவர்கள் 1971-ம் வருடம் மே மாதம் 7-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

அம்பாசமுத்திரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் நாடு சட்டப்பேரவையில் 1957லிருந்து 1971-ம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் 1971-ம் ஆண்டு மே மாதம் 24-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

வடக்கு மைய நிலச்சுவான்தார்கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ் நாடு சட்டப்பேரவையில் 1946-இல் இருந்து 1952-ஆம் ஆண்டு வரை, உறுப்பினராக இருந்த திரு. சர்வஞான குமார கிருஷ்ண யஜேந்திர பகதூர்வாரு அவர்கள் 1971-ம் வருடம் ஜூன் மாதம் 1-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

மைசூர் சட்டமன்ற மேலவைத் தலைவரான திரு. ஜி. வி. ஹல்லிகேரி அவர்கள் 1970-ம் ஆண்டு மே திங்கள் 15-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும், அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்)

2. அறிவிப்பு.

அரசுத் துறைகள் வினாக்களுக்கான விடைகளை விரைவாக அனுப்புவது குறித்து.

MR. SPEAKER : I have to make the following announcement to the House. The first session of the Legislative Assembly was prorogued on 12th April 1971. From 15th April 1971 to 30th April 1971, four hundred questions and for the period from 1st May 1971 to 31st May 1971, six hundred and twenty-four questions have been communicated to the Departments of the Secretariat. As such, against 1,024 questions, answers to only 33 questions have so far been received in my Office

According to rule 34 of the Tamil Nadu Legislative Assembly Rules a Department should furnish the answer to a question within 15 days from the date of its receipt and the Speaker can grant an extension of time to a reasonable period for furnishing an answer on the request of the Department. But, so far, such requests have been received only in respect of 4 questions.

I have therefore ordered my Department to include 10 questions in the order in which they were communicated to the Departments of the Secretariat, in the Order Paper for each day from 23rd June 1971, whether answers are received or not. I therefore request the Hon. Ministers to issue necessary instructions to the Departments concerned for the speedy despatch of answers.

3. வினுக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினுக்கள்.

அரிசனங்களுக்கு வீட்டு வசதி.

*** 1 வினு.—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்கு வீடு கட்ட அரசாங்கம் மானியம் ஏதேனும் வழங்க தற்போது உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) அரிசனங்களுக்கு வீடு கட்ட அரசு மானியம் வழங்கும் திட்டம் நடைமுறையிலேயே உள்ளது.

(இ) இத்திட்டத்தின் கீழ் ஒரு வீடு கட்டிக் கொடுப்பதற்கான செலவு ரூ. 940 ஆகும். இத்தொகையில் ரூ. 250 கடனுகக் கருதப்படுகிறது. மீதமுள்ள தொகை மானியமாகக் கொடுக்கப்படுகிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுகிற திட்டத்தின் கீழ் பல இடங்களில் அதிகமாக இடம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், பணமில்லாத காரணத்தினுல் பல இடங்களில் அவர்கள் வீடு கட்டாமலேயே திண்டாடிக்கொண்டு இருக்கிருர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? வீடுகள் கட்டுவதற்கு எந்த எந்த வகையில் அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கனவே பல ஆயிரக்கணக்கான மனைக்கட்டுகள் அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர்கள் வீடு கட்ட முடியாமல் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக இந்தத் திட்டத்தை அரசு அமுல்படுத்திவருகிறது. மேலும் கடன் கொடுத்தால் திருப்பித்தர வசதியுள்ளவர்களுக்கு மூவாயிரம் ரூபாய் வரையிலும் கடனுக வீடு கட்டிக்கொள்ள உதவி செய்யும் திட்டமும் இருக்கிறது. இப்படி அரசு எல்லாவகையிலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அமைச்சர் அவர்கள் தம் பதிலில் ஒரு வீட்டுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னுர்கள். சென்ற இரண்டு ஆண்டுகளாக இந்தத் திட்டத்தின் கீழ் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது ? எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன ? எவ்வளவு மனுக்கள் வந்திருக்கின்றன. வந்த மனுக்கள் —கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் இவற்றின் ரேஷியோ என்ன என்று சொல்லமுடியுமா ?